**Daily Thanthi**, Coimbatore, August 27, 2010




நிகழ்ச்சியில் கே.எம்.சி.எச். தலைவர் யு.கே.அனந்தநாராயணன் மாணவர் ஒருவருக்கு பரிசு வழங்கிய போது எடுத்த படம். அருகில், டி.சி.எஸ். குளோபல் அலையன்சஸ் துணை தலைவர் கே.ஜெயராமகிருஷ்ணன், நிர்வாக இயக்குனர் என்.சந்திரசேகரன், மற்றும் தாமஸ் சைமன் ஆகியோர் உள்ளனர்.

டி.சி.எஸ். நிறுவனம் சார்பில்

# வினாடி-வினா போட்டியில் வென்றவர்களுக்கு பரிசு

கோவை,ஆக.27–

டாடா கன்சல்டன்சி நிறுவனம் சார்பில் 'டி.சி.எஸ். ஐ.டி. விஸ் 2010' என்ற பெயரில் தகவல் தொழில்நுட்ப வினாடி வினா நிகழ்ச்சி கோவை, சென்னை, டெல்லி உள்பட பல முக்கிய நகரங்களில் நடைபெற்றது. இந்தியா முழுவதும் நடைபெற்ற இந்த போட்டியில் 8–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை படித்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த போட்டியில் கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 661 பள்ளி மாணவர்கள் ஆயிரத்து 300 பேர் கலந்து கொண்டனர். இதன் இறுதி சுற்றுப் போட்டியில் 6 பள்ளிகளை சேர்ந்த 12 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் முதல் 2 இடங்களை பிடித்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. போட்டிக்கான பரிசளிப்பு விழா கோவை ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கே.எம்.சி.எச். ஆஸ்பத்திரி தலைவர் யு.கே. அனந்தநாராயணன், டி.சி.எஸ். குளோபல் அலையன்சஸ் துணை தலைவர் கே.ஜெயராமகிருஷ்ணன், டி.சி.எஸ். தலைமை செயல் அதிகாரி என்.சந்திரசேகரன், மற்றும் நிர்வாகி தாமஸ் சைமன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

இதில் முதல் இடத்தை பிடித்த குன்னூர் ஸ்டேன்ஸ் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் நிதின் வித்ய பிரகாஷ் மற்றும் ஸ்ரீ காந்த ஸ்ரீதர் ஆகிய 2 பேருக்கும் தலா ரூ. 45 ஆயிரம் மதிப்புள்ள லேப்டாப் மற்றும் பரிசு பொருட்களும், 2–ம் இடம் பிடித்த நீலகிரி மாவட்டம் புனித ஜூட்ஸ் பப்ளிக் மற்றும் ஜூனியர் கல்லூரி மாணவர்கள் சுரேஷ் சர்மா, எஸ்.வெங்கடேஷ் ஆகிய 2 பேருக்கும் தலா ரூ. 30 ஆயிரம் மதிப்புள்ள மினி லேப்–டாப் மற்றும் பரிசு பொருட்களும் வழங்கப்பட்டன. போட்டியில் 3, 4, 5, 6–வது இடங்களை பிடித்த மாணவர்களுக்கும் பல்வேறு பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. வினாடி–வினா போட்டிகளை கிரி நடத்தினார்.